நண்பகல் 12.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான விளக்கத்திற்குப்பின் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது. (குறுக்கீடு) நான் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். எனவே, அதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

3. கவன ஈர்ப்பு

அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கு மாற்றும் அரசு முடிவை செயல்படுத்தாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ச. காந்திராஜன் மற்றும் திரு. எம். பெரியவீரன், ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ச. காந்திராஜன். (குறுக்கீடு)

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இளம்வழுதி, இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது. பேரவை விதி 56-ஐப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு) விதி 56-ஐப் படித்து பாருங்கள். திரு. ச. காந்திராஜன்—

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அன்னை தெரசா பல்கலைகழகத்தை சென்னையிலிருந்து கொடைக்கானலுக்குக் கொண்டு செல்லும் அரசின் முடிவை செயல்படுத்தாமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

1984-ம் ஆண்டில் மகளிரியலை (Women's Studies) பொறுத்த மட்டில் மாநில முறைமையிலான தொடர்புபடுத்தும் பொறுப்பு, (Monitoring) ஆலோசனை நல்கும் பணிகள் (Consultancy Services) மற்றும் ஆய்வு செய்தல் (Research) ஆகிய நோக்குடன் அன்னை தெரசா பல்கலைக் கழகம் என்ற பெயரில் ஒரு பல்கலைக் கழகம் கொடைக்கானலில் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பல்கலைக் கழகம் 1990 ஏப்ரல் மாதம் வரை கொடக்கானலில் செயல்பட்டு வந்தது. பின்னர் இப்பல்கலைக் கழகம் 1990 ஆம் ஆண்டு மே மாதம் சென்னைக்கு மாற்றப்பட்டது. மகளிர் மேம்பாடு மற்றும் பெண்களுக்கு சீரிய கல்வி ஆகிய முக்கிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு இப்பல்கலைக் கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்கு மாற்ற அரசு முடிவு செய்து 5-2-93 ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண் 133 வெளியிடப்பட்டது. 1-5-1993 முதல் கொடைக்கானலில் பல்கலைக்கழகம் செயல்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்தை மாற்ற முடிவு எடுத்துபோது, படித்து வரும் (M.A) முதுகலைப் பட்ட படிப்பில் இரண்டாம் ஆண்டும், எம்.சி.ஏ., (M.C.A.) படிப்பில் படிக்கும் முதல், இரண்டாம் ஆண்டு மாணவிகள் நலனைக் கருதி, அவர்கள் சென்னையிலேயே தங்களது படிப்பைத் தொடர அனுமதி அளிக்கப்பட்டது. இதன்படி முதுகலை மாணவிகளது படிப்பு 1993-94 ஆண்டிற்குள் முடிவடைகிறது. வரும் கல்வியாண்டில் (1994-95) 27 மாணவிகள் மட்டும் இறுதியாண்டு எம்.சி.ஏ., படிப்பை சென்னையில் தொடர அனுமதி அளிக்கப்பட்டது.

இதற்கிடையில் மேற்கூறிய அரசின் முடிவை எதிர்த்து அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை சார்ந்த சில ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அந்த வழக்கில் அரசின் முடிவு சரியானது என தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்த வழக்கு அரசிற்கு சாதகமாகவே முடிந்தது. இந்தத் தீர்ப்பினைத் தொடர்ந்து அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை கொடைக்கானலுக்கு 1-1-94 முதல் மாற்றக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கிணங்க அப்பல்கலைக் கழகத்தில் மொத்தம் 84 ஆசிரியர் மற்றும் அலுவலர்களில் 55 நபர்களை கொடைக்கானலில் 3-1-94 அன்று பணியில் சேருமாறு உத்தரவிட்டது. அவர்கள் 3-1-94 அன்றே பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். அன்னை தெரசா பல்கலைக் கழகத்தின் நிதிப் பிரிவும் கொடைக்கானலில் இயங்கி வருகிறது.

மேலே அரசு ஆணை 133, நாள் 5-2-93 உத்தரவின்படி, இறுதியாண்டு எம். சி. ஏ. (M.C.A) படிக்கும் 27 மாணவிகளுக்கு கற்பிக்கத் தேவையான சில ஆசிரியர்களும் மற்றும் அலுவலர்களுமாக மொத்தம் 29 பேர்கள் இங்கு உள்ளனர். எனவே மேற்குறிப்பிட்ட மாணவிகள் இறுதியாண்டு முடித்ததும், எல்லா ஆசிரியர் மற்றும் அலுவலர்களும் கொடைக்கானலுக்கு அனுப்பப்படுவர். இதன்படி அனைத்து ஆசிரியர்களும் மற்றும் அலுவலர்களும் 29-4-94 அன்று கொடைக்கானலில் பணியில் சேர பணிக்கப்பட்டுள்ளனர்.

கோடை விடுமுறைக்கு பின் 1994 ஜூலை மாதம் முதல் தொடர்ந்து பல்கலைக் கழகம் கொடைக்கானலில் செயல்படும். மேலும், வருகின்ற கல்வியாண்டில் (1994-95)-ல் புதிய மாணவர்கள் கொடைக்கானலில்தான் சேர அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் கொடைக்கானலில் அரசின் ஆணைப்படி முறையாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விவர அறிக்கையில், அன்னை தெரசா பல்கலைக் கழகம் கொடைக்கானலில் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக, நியமிக்கப்பட்ட மால்கம் ஆதிசேஷய்யா கமிட்டியினுடைய அந்த அறிக்கை மற்றும் நோக்கங்களை இங்கே .... (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது. நான் தீர்ப்புச் சொல்லியாகி விட்டது. திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): அந்த நோக்கங்களை இங்கே அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்களேயோழிய, அதற்குப் பின்னால் அந்த அறிக்கையினுடைய மூன்றாவது பாரா, பக்கம் 2-இல், இந்தத் தீர்ப்பினைத் தொடர்ந்து அரசு ஆணை எண் 133 தேதி 5-2-93-இன்படி 1-1-94 முதல் மாற்றம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இளம்வழுதி, விதி 56-இன்படி நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு எதுவுமே அதிலே எழுப்ப முடியாது.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்து கொண்டு

இருக்கிறார்கள். தாங்கள் சொல்கின்ற கட்டளையை மீறி நடக்கின்றார்கள். ஆகவே, அதற்கு இடம் அளிக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இளம்வழுதி, உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) விதி 56-இல் நான் தீர்ப்புச் சொன்னதற்குப் பிறகு, எதுவும் பேச முடியாது என்று இருக்கிறது. (குறுக்கீடு) இப்போது உட்கார முடியுமா, முடியாதா? (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடு) நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். இளம்வழுதி உட்காரவேண்டும். (குறுக்கீடு) பேரவை விதி 56-ன் படி நான் ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு எதையும் பேசுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை. (குறுக்கீடு) இளம்வழுதி, நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.(குறுக்கீடு) இளம்வழுதி, அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) இளம்வழுதி அவையைவிட்டு வெளியேற வேண்டும்.(குறுக்கீடு) மார்ஷல் காவலர்கள் உதவியோடு இளம்வழுதியை அப்புறப்படுத்தவும். (குறுக்கீடு) பேரவை விதியையாவது பார்க்க வேண்டும்.(குறுக்கீடு) பேரவை விதி 56-ன்கீழ் நான் ஒரு முடிவை அறிவித்ததற்குப் பிறகு, பேசுவதற்கு அனுமதி இல்லை. (குறுக்கீடு) இளம்வழுதி, காவலர்களோடு மோதினால் கடும் விளைவு ஏற்படும்.

(திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

இளம் வழுதி, இன்று இரண்டாவது முறையாக அவையிலேயிருந்து அப்புறப்படுத்தப்பட்டு இருக்கிற காரணத்தால், இந்தக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் இளம்வழுதி அவையிலேயிருந்து வெளியேற்றப்படுகிறார். திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற விவர அறிக்கையில், இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மால்கம் ஆதிசேஷய்யா குழுவினுடைய நோக்கங்களும் அறிக்கைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தவிர, அதற்குப் பின்னால், 5-3-93-ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண் 133-இன் பிரகாரம், இந்த பல்கலைக் கழகம் மீண்டும் கொடைக்கானலுக்கு 1-1-94 முதல் மாற்ற கேட்டுக்கொள்ளப் பட்டதாகவும், அதிலேயுள்ள மொத்த ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் 84 பேர்களில், 55 நபர்கள் 3-1-94 ஆம் தேதி அங்கே சேர்ந்து, பணியிலே இருந்து வருவதாகவும், ஒரு தவறான விவரத்தை இந்த அறிக்கையிலே கொடுத்து இருக்கின்றார்கள். அது உண்மை அல்ல. ஏற்கனவே 55 நபர்கள் அங்கே சேர்ந்ததாகச் சொல்லி, அவர்களெல்லாம் 3-1-94ஆம் தேதி அன்றையதினம் சேர்ந்து, அன்று மாலையே மீண்டும்

சென்னைக்கு வந்து விட்டார்கள். உண்மையிலேயே, அங்கு இருக்கின்ற மொத்த அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் 21 பேர்கள்தான் அந்தக் கொடைக்கானலிலே பணியாற்றி வருகிறார்கள். எனவே, தவறான அந்த ஒரு அறிக்கையை அந்த அரசு அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனவே, தவறான அறிக்கையைக் கொடுத்த அந்த அதிகாரிகள் மீது அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்வதோடு, மீண்டும் வருகின்ற ஜூன் மாதம் அந்தப் பல்கலைக் கழகம் அங்கே தொடங்கி நடப்பதற்காக விரைவான நடவடிக்கையை எடுத்து, அதற்கான அந்தக் கோப்புகளையெல்லாம் கால்ஃபார் செய்ய வேண்டுமென்று சொல்லி, அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பல்கலைக் கழகம் 1984 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு மே மாதம் முன்னாலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இதை சென்னைக்கு மாற்றி விட்டது. அந்தக் கால கட்டத்திலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கேயிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அத்துணை பேரும் மாற்றக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றார்கள். மீண்டும்......

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வெளியேற்றிய உறுப்பினர் அங்கே **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் அவைக்குறிப்பிலே இருக்காது. நான் இங்கிருந்து வெளியேற்றிய உறுப்பினர்கள் அவை வளாகத்திலேயே இருக்கக்கூடாது என்பதுதான் விதி. ஒருவேளை அவர்கள் அவை வளாகத்திலே இருப்பார்களேயானால் அங்கு இருந்தும் அப்புறப்படுத்தக் காவலர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவரவர்களே, ...

திரு.வே. தம்புசாமி: தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் முடியட்டும், உட்காருங்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: ஆகவே, அரசு 5-2-93-ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண் 133-இன்படி, இந்தப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பல்கலைக் கழகம் கொடைக்கானலில் 1-5-93 முதல் செயல்படவேண்டுமென்று உத்தரவைப் பிறப்பித்தது.

பல்கலைக் கழகத்தை மாற்ற முடிவெடுத்தபோது இங்கே - சென்னையில் எம்.ஏ., படிப்பில் படிக்கும் முதல், இரண்டாம் ஆண்டு மாணவிகள் நலனைக் கருதி அவர்கள் சென்னையிலேயே தங்களது படிப்பைத் தொடர அனுமதி அளிக்கப்பட்டது.

இதன்படி, முதுகலை மாணவிகளது படிப்பு இந்தக் கல்வியாண்டிலேயே முடிந்து விடுகிறது.

வரும் கல்வியாண்டில் 27 மாணவிகள் மட்டும் எம்.சி.ஏ., படிப்பை இறுதியாண்டை சென்னையிலே தொடர அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இதை எதிர்த்து அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த சிலர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர்கள் உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்கில் அரசுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைத்தது. அதையும் எதிர்த்து அவர்கள் மேல்முறையீடு செய்து, அதிலும் அரசுக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்தது. எனவே, இந்தத் திர்ப்பைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தைக் கொடைக்கானலுக்கு 1-1-94 முதல் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதற்காக D.O. Letter No. 9894/93 dated 11-11-93 Additional Secretary, Education Department அவர்கள் எழுதினார்கள், அதனையடுத்து, 15-11-93-இல் மற்றொரு D.O. Letter No. 9894/NUI–II, 9318 இதைக் கல்விச் செயலாளர் அவர்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுக்கு எழுதி, உடனடியாகக் கொடைக்கானலுக்கு இந்தப் பல்கலைக் கழகத்தின் அனைத்து அலுவலர்களும் மாற்றப்பட வேண்டுமென்று தெரிவித்து இருந்தார்கள்.

இதனையடுத்து, 3-1-94-இல் 53 ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் கொடைக்கானலிலே சென்று பணியிலே அமர வேண்டுமென்று ஆணையிடப்பட்டதாக பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே தரப்பட்ட கருத்துக்கள் துணைவேந்தர் அவர்களால் தரப்பட்டிருக்கின்றன.

ஆனால் உண்மையில் அங்கே அவர்கள் பணியிலே சேர்ந்ததற்குப் பின்னால் உடனடியாக 30 பேரை மாற்றுப் பணி நிமித்தமாகச் சென்னைக்கு அவர்கள் அழைத்திருக்கிறார்கள் என்று செய்தி கிடைத்திருக்கிறது.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1994 ஏப்ரல் 11 பிற்பகல் 12.10

பதிவாளர் மற்றும் நிதித் துறை கொடைக்கானலுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. 3 லாரிகளில் இங்கிருந்து தளவாடங்கள் மற்றும் புத்தகங்கள் போன்றவை, கொடைக்கானலுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில், அனுமதிக்கப்படுகின்ற மாணவிகள் அத்தனைபேரும், கொடைக்கானலிலே படிப்பார்கள் என்றும் துணை வேந்தர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே மாற்றுக் கருத்துக்கள் ஏதேனும் இருப்பின், உரிய முறையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. சந்திரஜன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விரிவான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், அவர், ஏற்கெனவே 55 நபர்கள் இன்று வரை வேலை செய்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். கடந்த வெள்ளிக் கிழமை வரை, அங்கே இருப்பவர்கள் 21 பேர்கள் மட்டுமே,வேலை செய்து வருகிறார்கள். Oral instructions கொடுக்கப்பட்டு, உடனடியாக ஒருநாள் மட்டும் Joining report -இலே, கையெழுத்துப் போட்டுவிட்டு, மீண்டும் அங்கே இருந்து வந்து விட்டார்கள். சென்னையிலேதான் இருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் சொன்னேன். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டேன். இருந்தாலும், அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தைச் சொன்னாலுங்கூட, எல்லாவற்றுக்கும் மேலாக, நம்முடைய அரசின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு, இந்த அரசினுடைய ஆணையைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு, விரும்புகிற சில அதிகாரிகளை அங்கே இருக்கிற உயர் பதவியிலே இருக்கிற ஒருவர்- ஏற்கெனவே, அமைச்சர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள்- அவர்களைப் பழிவாங்க நினைப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சிக்காக, அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய பதிவாளர், இந்தப் பல்கலைக் கழகத்தை அங்கே மாற்ற வேண்டுமென்று சொல்லி விரும்புகிற அவர்களைப் பணியிலே இருந்து நீக்கி, வெளியே அனுப்புவதற்குத் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது என்ற அந்த நிகழ்ச்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதுமட்டுமல்ல, கொடைக்கானலிலே அந்தப் பல்கலைக் கழகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். வருகிற ஜூன் மாதத்தில், நம்முடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைக் கொண்டு, அவர்களுடைய திருக்கரங்களால், அந்தப் பல்கலைக் கழகம் மீண்டும் அங்கே ஆரம்பிக்கப்படுமா? அதற்கான உறுதிமொழியை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேரவையினுடைய இந்தக்கூட்டத்தின்

வாயிலாக அறிவிப்பார்களா என்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் தொடர்பாக, பல்வேறு புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் தொடரப்படும். பணியிலே சேர்ந்த 53 பணியாளர்களில், பலரை வாய்மொழி உத்தரவின் மூலம், மாற்றுப் பணிக்காக, துணை வேந்தர் அவர்கள், இங்கே அழைத்திருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல: பதிவாளர் அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்கிற வகையிலே ஒரு தீர்மானம் இயற்றப்பட்டு, அது நடைமுறைக்கு வரவேண்டுமென்று அவர்கள் முயற்சி எடுப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிற அனைவரும், 29-4-1994 அன்று கொடைக்கானலிலே இருக்கிற அலுவலகத்திலே போய், கையொப்பமிட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், கிடைத்திருக்கிற செய்தி, அவர்கள் பணியிலே சேர்ந்த பின்பு, உடனடியாக அவர்களுக்கு Summer Vacation என்று, அந்த விடுமுறையிலே வந்துவிட்டு, மீண்டும் அவர்கள் சென்னைக்கு வருவதற்கு ஒரு முயற்சியை மேற்கொண்டிருப்பதாகவும், அதற்கும் மேலாக, சென்னையில் எப்போதுமே ஒரு 'சென்டர்' வைப்பதற்கு ஏற்பாடு நடப்பதாகவும், பணியாளர்களில் சிலரும், பயில்கிற மாணவிகளில் சிலரும் கடிதங்கள் எழுதித் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட புகார்களின் அடிப்படையில், அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. ஜூன் மாதத்தில் கொடைக்கானல் அன்னை தெராசா மகளிர் பல்கலைக் கழகம் கொடைக்கானலிலேதான் செயல்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதன்படி அது செயல்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய இசைவினைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். பெரியவீரன்.

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்கள் திட்டம், மற்றும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எம். பெரியவீரன்: நல்ல நோக்கத்தோடு உலகத்தின் சமாதானப் புறாவாக திகழ்ந்து கொண்டிருக்கும் அன்னை தெரசாவின் பெயரால், ஒரு பல்கலைக்கழகத்தை, பெரியகுளமாகிய எனது தொகுதியிலுள்ள, கொடைக்கானலில் நிறுவி, அந்தப் பகுதிக்கு பெரிய கௌரவத்தை

உண்டாக்கிக் கொடுத்தார்கள். கிராமப்புறங்கள் மேன்மை அடைவதற்கும் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் பலதரப்பட்ட மக்கள் அங்கே வந்து, ஒன்று சேர்ந்து, ஆராய்ச்சி செய்வதற்கு தகுந்த இடமாகக் கருதித்தான், கொடைக்கானலிலே, அந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவினார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள், அதைச் சென்னைக்கு மாற்றி விட்டனர். புரட்சித்தலைவர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக அந்தத் திட்டம் அங்கே செயல்பட வேண்டும் என்று நினைத்துச் செய்தாரோ, அதே நோக்கத்தோடு, அந்தத்திட்டத்தை, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் கொடைக்கானலுக்கு அர்ப்பணித்தும்கூட, அந்தப் பல்கலைக்கழகம் மீண்டும் கொடைக்கானலுக்குச் செல்வதற்குத் தடையாக இருக்கக்கூடிய பல்கலைக்கழக அதிகாரிகள் சில பேர், சில மாணவிகளைத் தூண்டிவிட்டு, அந்த நிகழ்ச்சியைத் தடை செய்து வருகிறார்கள். கோர்ட் தீர்ப்பும் கூட அரசுக்கே சாதகமாக, கொடைக்கானலிலேயே செயல்படவேண்டும் என்று சொன்னதற்குப் பிறகும் கூட மீண்டும் அந்தப் பல்கலைக் கழகம் அங்கே செயல்படுகிறது என்று அரசுக்கு ஒரு தவறான கருத்தைச் சொல்லிவிட்டு இன்னும் அங்கே பணி செய்பவர்களை அச்சுறுத்திக் கொண்டு செயல்படவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து அமைச்சரின் கவனத்திற்குத் தெரியப்படுத்தி அவர்களும் தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்றும் கூறியுள்ளார்கள். இந்த நிலையில் வருகிற கல்வியாண்டில் புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்து, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்த யுனிவர்சிட்டியை இன்னும் பெரிய அளவில் உருவாக்கி, உலக நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் அங்கே வந்து கல்வி பயில்வதற்கு ஏற்பாடு செய்து, உலக சாதனை படைத்த புரட்சித் தலைவி என்ற ஒரு பட்டத்தை அவர்கள் பெறுகிற அளவுக்கு தகுந்த ஏற்பாடுகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல். 12.15

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் அனைத்தையும் அரசு அறியும். வரும் கல்வியாண்டில் கொடைக்கானலில் வகுப்புகள் அனைத்தும் நடைபெறுகின்ற வாய்ப்பை அரசு நிச்சயமாக உருவாக்கும். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அழைக்கிற பொறுப்பில் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு திரு. பெரியவீரன் அவர்களும் என்னோடு, இணைந்து செயல்படவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.